1978 செம்டம்பர் 14]

திரு. இரா. தாமரைக்கனி : தலைவரவர்களே, மன்னார்குடிக்கு அடுத்த பெரிய நகரமாக திருத்துறைப்பூண்டி விளங்குகிறது. திருத்துறைப்பூண்டியில் புகையிலை விளைகிறது. ஆகவே, அது ஒரு மார்கெட் சென்டராக இருப்பதாலும், தொழிலாளர்கள் அதிகமாக இருப்பதாலும், மாணவர்கள் அதிகமாக இருப்பதாலும், அது ஒரு பெரிய வியாபார ஸ்தலமாக இருப்பதாலும் அரசு அதில் சிரத்தை எடுத்துக்கொண்டு நம்முடைய அண்ணன் உத்திராபதி சொல்லியதைப்போல் அந்தப் பேரூராட்சியை நகராட்சியாக மாற்றுவதற்கு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன். அதைவிட சிறிய பேரூராட்சிகள் எல்லாம் நகராட்சிகளாக மாற்றப்பட்டு இருக்கிற போது........

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, நகராட்சியாக்கப்படும்.

திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அமைச்சரவர்கள் பதில் அளிக்கிறபோது விரைவில் திருத்துறைப்பூண்டி பேரூராட்சி நகராட்சியாக ஆக்கப்படும் என்று சொன்னார்கள். தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்த வரையில், திருத்துறைப்பூண்டியைப் போல் வேறு எந்தப் பேரூராட்சியை நகராட்சியாக மாற்ற அரசு ஆய்வு செய்து கொண்டு இருக்கிறது என்பதை அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, திருமங்கலம், கீழக்கரை, திருக்கோவிலூர், கள்ளக்குறிச்சி, உசிலம்பட்டி ஆகிய 5 பேரூராட்சிகள் நகராட்சிகளாக மாற்ற ஆய்வு நடத்தப்படுகிறது.

பூதப்பாண்டி பேரூராட்சி.

*வினு எண். 216—திரு. செ. கிருஷ்ணன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) கன்யாகுமரி மாவட்டம், தோவாளை ஊராட்சி ஒன்றிய எல்லைக்கு உட்பட்ட பூதப்பாண்டி பேரூராட்சியையும், சுற்று வட்டார ஊராட்சிகளையும் சேர்த்து நகர் மன்றமாக அமைக்கும் திட்டம் ஏதேனும் உண்டா?

(ஆ) ஆம் எனில் அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : (அ) இல்லை.

(ஆ) வினுவிற்கு இடமில்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

திரு. செ. கிருஷ்ணன் : பேரவைத் தலைவரவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் தோவாளை தாலூக்காவில் பூதப்பாண்டி பேரூராட்சியும் நகராட்சியாக மாற்றுகிற அளவிற்கு எல்லா வசதிகளையும் கொண்டதாக இருக்கிறது. ஆகவே, அந்தப் பகுதியில் உள்ள மக்களின் நன்மையைக் கருதி அதை நகராட்சியாக மாற்ற அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக அந்தப் பரிந்துரை அரசுக்கு வருமானால், ஆலோசிக்கலாம்.

அர்ச்சகர்கள் சட்டம்.

*வினா எண். 217—திரு. எஸ். கணேசன், திரு. மா. மணிமாறன், திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தமிழ்நாடு சட்டமன்றத்தினரால் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டு உச்ச நீதி மன்றத்தின் தீர்ப்பினால் முடமாக்கப்பட்ட 'அர்ச்சகர் சட்டத்தை' செல்லுபடியாக்கிட இந்த அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : அரசியல் சட்ட திருத்தத்தின் மூலம் அடைய வேண்டிய இந்தக் குறிக்கோளை அடைவதற்கான வழிமுறைகள் அரசின் பரிசீலனையில் உள்ளன.

திரு. எஸ். கணேசன் : பேரவைத் தலைவரவர்களே, பெரியாரின் திருவுருவப்படத்தை இந்த மன்றத்தில் திறக்க இருக்கிறோம். பெரியார் 100 ஆண்டு விழா கொண்டாட இருக்கிறோம். இந்த நேரத்தில் ஐயா அவர்களின் தொண்டுக்கு மரியாதை செய்யும் வகையில் அந்த அர்ச்சகர் சட்டம் செல்லுபடியாகும் அளவில் அரசியல் சட்டத்தைத் திருத்தக் கோரி இந்த அரசு மீண்டும் மத்திய அரசை வற்புறுத்துமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, பெரியார் 100-ஆண்டு விழா கொண்டாடுகிறோம், பெரியாரின் படத்தை திறக்கிறோம் என்பது எல்லாம் நம்முடைய அதிகாரத்திற்கு உட்பட்டது. நம்முடைய கையில் இருக்கிற விவகாரங்கள். ஆனால் இது அரசியல் சட்டம் திருத்தப்பட்டு செய்ய வேண்டிய காரியம் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் அறிவார்கள். 1970-ம் ஆண்டில் தொடங்கி, 1975-ம் ஆண்டு வரையில் ஒரு நெருக்கடி நிலைமையில் அது நின்று விட்டது என்பதையும் அறிவார்கள். ஆகவே, இவ்வளவு பெரிய சிக்கலான பிரச்னையை இந்த அரசு கவனத்தோடும், ஆர்வத்தோடும் பரிசீலிக்கும். அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.